1979 பிப்ரவரி 17]

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத்தொகை முதலியன.

*வினா எண். 71— திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதன முதலீட்டில் தொழிலாளர்களிடம் பிக்சட் டெபாசிட், கடன் பத்திரங்கள் மூலம் வசூலிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

(ஆ) அத்தொகைக்கு 1976-ம் வருடம் கொடுக்கப்பட்டுள்ள வட்டி எவ்வளவு? கொடுக்க பாக்கியுள்ள வட்டி எவ்வளவு?

(இ) பணம் வாங்கப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அத்தாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 31-3-78-ந் தேதி நிலவரப்படி சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதன முதலீட்டில் தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கடன் பத்திரங்களுக்கானது ரூபாய் 21,10,820/-.31-7-78-ந் தேதி நிலவரப்படி தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பிக்சட் டிபாசிட் தொகை ரூபாய் 1,00,600 ஆகும்.

(ஆ) 1977-78-ம் வருடத்திற்கு பிக்சட் டிபாசிட்டிற்கு ரூபாய் 14,208.80 வட்டித் தொகையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1977-78-ம் வருடத்திற்கு கடன் பத்திரங்களுக்கு ரூபாய் 1,48,071 வட்டித் தொகையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பணியில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்க பாக்கியுள்ள வட்டி ஏதும் இல்லை.

(இ) பணம் வாங்கப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அத்தாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. கு. ரமணி : சேரன் டிரான்ஸ்போர்ட் கழகத்தில் தொழிலாளர்களுடைய பணமே சுமார் 22 லட்சம், 23 லட்சம் போட்டு உண்மையிலேயே அந்த நிறுவனத்தின் உரிமையாளர்கள் அந்தத் தொழிலாளர்கள் என்று சொல்லத்தக்க அளவுக்கு இருக்கிறது. இதில் பணம் போட்டவர்கள் பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கு அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று ஏதாவது புகார்கள் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா? பல பேர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்படாமல் பலவிதமான கணக்குகளைக் காட்டி ஏமாற்றப்படுகிறார்கள் என்ற ரிப்போர்ட் எனக்கு வந்திருக்கிறது. இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூலதன முதலீட்டில் பங்குதாரர்களாகச் சேர்ந்தவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு அந்தப் பங்குதாரர்களுக்கு அந்தப் பணம் திருப்பித்தர வேண்டுமென்ற கோரிக்கைப் பற்றி அரசுக்குத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுப்பார்களானால் கண்டிப்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : பங்குதாரர்களாகப் பணம் கொடுத்தவர்கள் மட்டுமல்ல, அதைவிட அதிகப்படியாக கடன் பத்திரங்கள் மூலமாக ஏராளமான பணம் போடப்பட்டு அந்தப் பணம் கொடுத்தவர்களுக்கு இந்த மாதிரி கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பல மாதங்கள் அவர்களை இழுத்தடித்து இன்னும் பணம் கிடைக்காத நிலமையில் கஷ்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விவரங்களை அரசுக்குக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கடன் பத்திரங்களை வாங்கிய தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டபின் அந்தத் தொகை அவர்களுக்கு இன்னும் வந்து சேரவில்லையென்றால் அதுபற்றிய தகவலின் பேரில் கண்டிப்பான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

கணபதி-உருமண்டம் பாளையம் சாலை.

*வினா எண். 72— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரத்தின் புறநகர் பகுதியில் சக்தி நெடுஞ்சாலையையும், மேட்டுப் பாளையம் நெடுஞ்சாலையையும் இணைக்கும் கணபதி–உருமண்டம் பாளையம் சாலையை நெடுஞ்சாலை இலாக்காவில் எடுத்து மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: கணபதி–உருமண்டம் பாளையம் சாலை நெடுஞ்சாலையோடு இணைக்கக்கூடிய பிரதானமான 'பை-பாஸ்' ரோடாக இருக்கிறது. கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் தகராறு ஏற்படக்கூடிய நேரத்தில்